
# திராவிடத்தால் வாழ்கிறோம்

911

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்


## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

21

திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.

# மணமகள்; ஒடுக்கப்படும் மூன்று பெண்களின் கதை!



படங்கள் உதவி : ஞானம்

1951-ஆம் ஆண்டு கலைஞரது திரைக்கதை வசனத்தில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் தயாரித்தும் இயக்கியும் வெளிவந்த சமூகத் திரைப்படம் ‘மணமகள்’. அப்போதே என்.எஸ்.கே. பல புதுமைகளை இத்திரைப் படத்தில் புகுத்தியிருக்கிறார். வசனகர்த்தா, பாடலாசிரியர், ஒளிப்பதிவாளர், ஒப்பனைக் கலைஞர் என ஒவ்வொருவர் பெயர் திரையில் வரும்போதும், அவர்களையே நேரடியாகத் திரையில் தோன்றச் செய்திருக்கிறார்.


படத்தின் வெற்றிக்கு உழைத்துவிட்டு, முகமற்றுப்போகும் தொழில்நுட்பக் கலைஞர்களை எல்லாம், மக்களுக்கு அடையாளம் காட்டும் அருமையான பணியை கலைவாணர் இத்திரைப்படத்தில் செய்துள்ளார். அதன் மூலம் மூத்த திராவிட இயக்கப் பாடலாசிரியர் உடுமலை நாராயண கவி அவர்களைத் திரையில் நாம் காணும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கிறது.

தலைவர் கலைஞர் மீசையில்லாத அழகிய வாலிபராக திரையில் தோன்றி, வணக்கம் சொல்கிறார். அதே போல இத்திரைப்படத்தின் உதவி இயக்குனரான பீம்சிங் அவர்களையும் திரையில் பார்க்க முடிகிறது.

இத்திரைப்படத்தில் 1950 - 60 என்றொரு நாடகமும் வருகிறது. என்.எஸ்.கே., டி.ஏ.மதுரம் ஜோடி இணைந்து நடித்துள்ள நாடகம். 1951 -இல் கலைவாணரின் ‘எதிர்கால தமிழ்நாடு-(1960)’பற்றிய கனவையும் எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் மட்டுமல்ல அவரது அரசியலையும் நமக்குப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. 1950-களில் தமிழ்நாட்டில் நிலவிய பசி, பஞ்சம், வறுமை எல்லாம் நீங்கி, 1960 களில் தமிழ்நாடு சுபிட்சமடைந்து கோயில்களில் பள்ளிக்கூடம் நடைபெறுகிறது. காவல் நிலையக் காவலர்கள் சுகாதாரப் பணிகளை மேற்கொள்கிறார்கள், பிச்சைக்காரர்கள் இல்லாது போகிறார்கள், புதிய கட்டடங்கள் முளைத்து இருக்கின்றன என்று காட்டி, இவ்வாறு தமிழ்நாடு மாறுவதற்கு மக்கள் தேர்தலில் சரியானவர்களுக்கு வாக்களிக்க வேண்டும் என தனது திரைப்படத்தில் (1951) காட்சிப்படுத்தியுள்ளார். இப்படத்தின் மூலக்கதை முன்சி பரமு பிள்ளை. பாடல்கள் உடுமலை நாராயணகவி.

### படத்தின் கதை

மெய்கண்டார் (என்.எஸ்.கே.) அநாதைக் குழந்தைகளுக்கான திருவள்ளுவர் ஆசிரமத்தை நடத்தி வருகிறார். அதன் புரவலராக மிராசுதார் பரமானந்தம் (டி.பாலசுப்ரமணியன்) இருக்கிறார். அவரது ஒரே மகள் குமாரி (பத்மினி). அவளது முறைப் பையன் சந்திரன் (சகஸ்ரநாமம்). இவர்களது வயதான வீட்டுக் கணக்குப் பிள்ளையின் இளம் வயது இரண்டாவது மனைவி விஜயா (லலிதா). ஒரு நாள் ஆசிரமத்தின் அருகே வீழ்ந்து கிடக்கும் ஒரு கர்ப்பிணிப் பெண்ணை, மாணவர்கள் தூக்கி வந்து பிரசவம் பார்க்கின்றனர். ஆண் குழந்தை பிறக்கிறது. மெய்கண்டார் அப்பெண்ணிடம், ‘நீ யார்’ என்று விசாரிக்கிறார். “நான் ஒரு விதவை. என் பெயர் ராதா (டி.ஏ.மதுரம்). ஸ்ரீ வைகுண்டத்தில் நானும் என் அம்மாவும் தோசை சுட்டு விற்றுப் பிழைத்து வந்தோம். ஒரு நாள் என் அம்மா இறந்து விட்டார். கடையை நான் தனியாக நடத்தி வந்தேன், வழக்கமாக கடைக்குச் சாப்பிட வரும் அத்தர் வியாபாரி வரதனும் (டி.எஸ். துரைராஜ்) பாகவதர் பாலுவும் (டி.எஸ்.பாலையா) இணைந்து சதித்திட்டம் தீட்டி, என்னைத் திருமணம் செய்துகொள்வதாக சொல்லி ஏமாற்றிவிட்டார் பாலு” என்று சொல்கிறாள். மெய்கண்டார், ராதாவையும் குழந்தையையும் ஆசிரமத்தில் தங்க வைக்கிறார்.



கலைவாணர் என்.எஸ்.கே.



டி.எஸ்.பாலையா

குமாரிக்குப் பாட்டு வாத்தி யாராக வரும் பாகவதர் பாலு, அவர்கள் வீட்டுக் கணக்குப் பிள்ளையின் இளம் மனைவி விஜயாவையும் வீழ்த்துகிறான். குமாரிக்கும் லண்டனில் படித்து விட்டுத் திரும்பும் சந்திரனுக்கும் திருமணம் நிச்சயமாகிறது. குமாரி மீது ஆசைப்படும் பாகவதர், வரதனுடன் பேசித் திட்டமிட்டு குமாரியிடம் அழுது புலம்பி நடித்து, தன் காதலை வெளிப்படுத்து கிறான். அப்போது அங்கு வரும் சந்திரன் பாகவதரை அடித்துத் துவைக்கிறான். அதனைக் குமாரி தடுக்கிறாள். அதனால், இருவருக்கும் சண்டை வருகிறது. திருமணம் தடைபடுகிறது. இதைப் பயன்படுத்தி பாகவதருக்கும் குமாரிக்கும் திருமணம் நடக்கிறது. குமாரியின் அப்பா சொத்துகளை குமாரிக்கும் பாகவதர் பாலுவுக்கும் எழுதி வைத்து விட்டு, தீர்த்த யாத்திரை போய் விடுகிறார். இதற்கிடையே குமாரி வீட்டிற்கு வரும் ராதாவைக் கண்டு கோபமுறும் பாகவதர், ராதாவையும் அவளது மகன் அழகிரியையும் தாக்குகிறான். காயமடையும் குழந்தை அழகிரி நோய்வாய்ப்பட்டு ஆசிரமத்தில் இறந்து விடுகிறான். குழந்தையைப் பார்க்க ஆசிரமம் வரும் குமாரி, பாகவதர் பற்றிய உண்மைகளை அறிந்து அவனுடன் வாழ மறுக்கிறாள். பாகவதரோ மிராசுதார் பணத்தைக் கொண்டு விஜயாவுடன் உல்லாசமாக வாழ்கிறான். தன் மனைவியின் தகாத நடத்தையைக் கண்டு கணக்குப்பிள்ளை ஊரைவிட்டு ஓடிப்போகிறான்.

ஒரு கட்டத்தில் சொத்துகளையும் பணத்தையும் பாகவதரிடமிருந்து காப்பாற்றி, ஆசிரமத்திற்கு எழுதி வைக்க குமாரி முயற்சிக்கிறாள். இதை அறிந்து விஜயா, வரதன், பாகவதர் பாலு மூவரும் சேர்ந்து குமாரியைக் கடத்தி வனமாளிகையில் அடைத்து வைத்துப் பத்திரத்தில் கையெழுத்துப் போடச் சொல்லி துன்புறுத்துகின்றனர். ராதா மூலம் செய்தியறிந்து, அங்கு வரும் சந்திரனுக்கும் பாகவதருக்கும் இடையில் நடைபெறும் சண்டையில் சந்திரன் காயமடைகிறான். இறுதியில், குமாரியைத் துரத்திச் செல்லும் பாகவதர் பாலு கட்டடத்தின் கூரையிலிருந்து விழுந்து இறக்கி றான். விஜயா வீதியில் காரில் இழுபட்டு, கணக்குப் பிள்ளையின் கண்முன் சாகிறாள். ஆசிரமத்தில் திருவள்ளுவர் படத்தின் முன் சந்திரனுக்கும் குமாரிக்கும் திருமணத்தை மெய்கண்டாரும் ராதாவும் நடத்தி வைப்பதுடன் படம் நிறைவடைகிறது. இதுவே படத்தின் கதை.

### ஆணாதிக்க ஒடுக்குமுறை

இப்படம் மூன்று பெண்களை மையமாகக் கொண்டு இயங்குகிறது. ராதா சமூகத்தின் அடித்தட்டில் வாழும் ஏழை. குமாரி சமூகத்தில் மேல்தட்டில் வாழும் மிராசுதார் மகள் பணக்காரி. இவர்களுக் கிடையே வாழும் நடுத்தர வர்க்கப் பெண் விஜயா. ஆனால், இம்மூவரும் இந்தச் சமூகத்தில் நிலவும் ஆணாதிக்க முறையால் பாதிக்கப்படுகின்றனர். வாழ வழியற்ற விதவையான தோசை சுட்டுப் பிழைக்கும் ராதாவானாலும், நடுத்தர வர்க்க விஜயாவா னாலும், பணக்காரி குமாரியேயானாலும் அனைவரும் இந்த ஆணாதிக்கச் சமூக அமைப்பில் அடிமைகள்தான் என்பதைச் சொல்லாமல் சொல்லிய படம்தான் மணமகள்.

ராதாவும் குமாரியும் பாகவதரால் ஏமாற்றப்படும் பெண்களாகக் காட்டப்படு கிறார்கள். ஆனால், விஜயா பாகவதருடன் சேர்ந்துகொண்டு குமாரிக்கும் ராதாவுக்கும் துரோகம் செய்பவளாகக் காட்டப்பட்டாலும், அவ்வாறு அவள் மாறுவதற்கான சமூகக் காரணியையும் கலைஞர் தனது திரைக்கதை வசனத்தின் மூலம் மிக நுணுக்கமாகப் பார்வையாளர்களுக்கு உணர்த்துவதுடன், வயதான ஆணுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்ட இளம் பெண்ணான விஜயாவின் உள்ளக் குமுறலை, அவ்வப்போது நாசுக்காக வெளிப்படுத்தவும் செய்கிறார்.

“வயதான ஆணுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்ட இளம் பெண்ணான விஜயாவின் உள்ளக் குமுறலை, அவ்வப்போது நாசுக்காக வெளிப்படுத்தவும் செய்கிறார்.”

...காட்சி விரியும்

## இதழியல் படிக்க விண்ணப்பிக்கலாம்!





தமிழ்நாடு அரசு புதிதாக நிறுவியுள்ள சென்னை இதழியல் கல்வி நிறுவனம், 2025-2026 கல்வியாண்டு முதல் இதழியல் முதுநிலைப் பட்டயப் படிப்பை (Post Graduate Diploma in Journa lism) வழங்குகிறது. தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

நடப்புக் கல்வி ஆண்டிற் கான முதுநிலைப் பட்டயப் படிப்புக்கான மாணவர் சேர்க்கை விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளன. சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தில் இணைந்து படிக்க விரும்புவோர் https://clj.tn.gov.in// என்னும் இணையதளத்தின் மூலம் 03.08.2025 வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தில் அச்சு, தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணைய ஊடகங்களில் பணிபுரிவதற்கான வாய்ப்பளிக்கும் வண்ணம் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கல்வி நிறுவனம் இதழியலுடன் இணைந்த டிஜிட்டல் மீடியா பயிற்சியும், காட்சித் தொடர்பியல் திறன் உள்ளிட்ட இதழியல் கல்வியையும் வழங்க இருக்கிறது. இக்கல்வி நிறுவனத்தில் சேர விரும்பும் வெளியூர் மாணவர்களுக்குக் குறைந்த எண்ணிக்கையிலான விடுதி வசதிகள் உள்ளன. இக்கல்வியைப் பெற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.

பத்திரிகையாளராக விரும்பும் இளையதலைமுறையினர், துறைசார்ந்த திறனை வளர்த்துக்கொள்ளும் அரிய வாய்ப்பை இந்நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு அரசின் இம்முயற்சிக்கும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர் வாழ்த்துடன் திருமண வெள்ளிவிழா!



ரேவதி அசோக்

2012-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் எங்கள் 25-வது திருமண நாளைக் கொண்டாடும் வகையில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து, வாழ்த்துப் பெற்றோம். அப்போது, நான் எனது கணவருக்கு உதயசூரியன் சின்னம் பதித்த மோதிரம் பரிசாக வழங்கி, அதனை தலைவர் அவர்களின் கரங்களால் அணிவிக்கச் செய்து மகிழ்ந்தேன். தலைவர் புன்னகையுடன் எங்களை வாழ்த்தியது, என்றும் நினைவில் நிற்கும் பசுமையான நினைவு.

– ரேவதி அசோக், மகளிர் அணித் தலைவி, திருநெல்வேலி மத்திய மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தி.மு.க. தேர்தல் ஈடுபாடு!

1957-ஆம் ஆண்டு பிப்ரவரி 10-ஆம் தேதி, தி.மு.க. தேர்தல் பிரச்சார சிறப்பு மாநாடு சென்னையில் நடைபெற்றது. தலைமை நிலையமான அறிவகத்தில் இருந்து, உதயசூரியன் சின்னம் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டது. ‘தி.மு.க தேர்தல் ஈடுபாடு’, ‘தேர்தலும் மக்கள் கடமையும்’ என்கிற தலைப்புகளில், தலைவர்கள் உரையாற்றினர். இந்த மாநாட்டில் கழகத்தின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131